1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 140/2022

2023 வது ஆண்டு நவம்பர் மாதம் 01–ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கண்ணன் | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு.சுந்தர்ராஜ் | கிராமம் | |
| வயது | 52 | மதம் | |

01.11.2023 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கு வாதிக்கும், 2 வது பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் வா.சா.ஆ.1. 09.03.2020 தேதியிட்ட வாடகை ரசீது வா.சா.ஆ.2. 20.12.2021 தேதியிட்ட வாடகை ரசீது வா.சா.ஆ.3. 20.12.2021 தேதியிட்ட வாடகை முன்பணம் செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ.4. 23.03.2022 தேதியிட்ட அறிவிப்பு வா.சா.ஆ.5.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)